


### நிவாரண முகாம்களில் தங்கியிருப்பவர்கள்

# குறையேதும் இருந்தால் பெரிதுபடுத்த வேண்டாம்

### மாமன்னர் வலியுறுத்தல்

பெக்கான், ஜன.13-

தற்காலிக நிவாரண முகாம்களில் தங்கியிருப்பவர்கள் அங்கு சிறு குறையேதும் இருந்தால் உடனடியாக அரசாங்கத்தை குறை கூற வேண்டாம் என மாட்சிமை தங்கிய மாமன்னர் அல்-சுல்தான் அப்துல்லா ரியாத்துடின் அல்-முஸ்தாபா பில்லா ஷா நினைவுறுத்தினார்.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் உதவவும் சிறந்ததை வழங்கவும் அமைச்சு எப்போதும் முனைப்புக் காட்டி வருகின்றது. எனவே நிவாரண மையங்களில் தங்கியிருக்கும் காலகட்டத்தில் மக்கள் பொறுமை காக்க வேண்டும்.

உதாரணத்திற்கு உணவு சிறிது தாமதமாக வழங்கப்பட்டால் உடனடியாக அங்கிருக்கும் பணியாளர்களை குறைகூறக் கூடாது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சூழலில் அரசாங்கம் ஏற்பாடு செய்து தரும் பல்வேறு உதவிகளால் அவர்கள் நிம்மதி கொள்ள வேண்டும்.

அதிலும் தற்போது நிவாரண மையங் களில் வழங்கப்படும் உணவுகள் மிகவும் ருசியாக இருப்பதாக கேள்விப்படுகின்றேன். முன்பைப் போல் சார்டின் மீன் உணவு இப்போது வழங்கப்படுவதில்லை எனவும் மெர்சோங் ஜெயா ஆரம்பப்பள்ளியில் திறக்கப்பட்டிருக்கும் நிவாரண மையங்களில் தங்கியிருப்பவர்களை சந்தித்தபோது மாமன்னர் குறிப்பிட்டார்.

மாமன்னருடன் பகாங் மாநில இடைக்கால சுல்தான் தெங்கு ஹஸானால் இப்ராஹிம் அலாம் ஷா வும் உடன் வந்திருந்தார். மேலும் பகாங் மாநில மந்திரிபெசார் டத்தோஸ்ரீ வான் ரோஸ்டி வான் இஸ்மாயில், பெக்கான் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ முகமட் புஸி ஆகியோரும் உடன் வந்திருந்தனர்.

இந்நிலையில் நிவாரண மையத்தில் தங்கியிருப்பவர்கள் சுகாதாரத்தைப் பேண வேண்டும். குறிப்பாக தொற்றுநோய்கள் பரவாமல் இருப்பதை தடுப்பதற்கு கழிப்பறை போன்ற பகுதிகளில் தூய்மை உறுதி செய்யப்பட வேண்டும்.

இந்த பொறுப்பை அனைவரும் ஏற்றுக் கொண்டு மற்றவர் மீது பழியை போடக் கூடாது. நாட்டில் இன்னமும் கோவிட்-19 வைரஸ் தொற்றுப் பரவல் இன்னும் இருக்கிறது. அதேசமயம் வேறு தொற்றுநோய்களும் பரவக் கூடாது எனவும் மாமன்னர் கருத்துரைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாமன்னர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முதியவர்கள், சிறார்களுக்கு நன்கொடையும் வழங்கினார்.

### பகாங்கில் வெள்ளத்தடுப்பு திட்டங்கள்

# அரசியலாக்க வேண்டாம்

### பேரரசர் பகாங் அரசுக்கு உத்தரவு



பெக்கான், ஜன.13-

பகாங் மாநிலத்தில் திட்டமிட்டபடி வெள்ளத்தடுப்புத் திட்டங்களை அமல்படுத்துவதை விரைவுபடுத்த வேண்டும் என்று அரசாங்கத்தை மாட்சிமை தங்கிய பேரரசர் அல்-சுல்தான் அப்துல்லா ரியாத்துடின் அல் - முஸ்தாபா பில்லா ஷா நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

மாநிலத்தில் உள்ள ஊராட்சித்துறைகள் திட்டமிட்டிருக்கும் வெள்ளத்தடுப்புத் திட்டங்களை மாநில அரசாங்கம் துரிதப்படுத்தும் என்று தாம் நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த விவகாரத்தில் அரசியல் வேண்டாம் என வலியுறுத்திய அவர், பகாங் மாநிலம் முழுவதும் வெள்ளத்தடுப்புத் திட்டங்கள் உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இங்கு டேவான் செமாய் பக்தி ஃபெல்டா சினி ஒன்றில் உள்ள வெள்ள நிவாரண முகாமில் தங்கியிருக்கும் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்த பின்னர் பேரரசர் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

பகாங் பட்டத்து இளவரசர் தெங்கு ஹஸானால் இப்ராஹிம் அலாம் ஷா, மாநில மந்திரிபெசார் டத்தோஸ்ரீ வான் ரோஸ்டி வான் இஸ்மாயில், மாநில பொதுப்பணி இலாகா இயக்குநர் டத்தோ ஹஃபிஸா ஸக்காரியா, பகாங் போலீஸ் தலைவர் டத்தோஸ்ரீ யாஹ்யா ஒஸ்மான், பெக்கான் மாவட்ட அதிகாரி டத்தோ ஸலிஸா ஸுல்கிப்ளி ஆகியோரும் உடனிருந்தனர்.

இதனிடையே, நேற்று முன்தினம் பிற்பகல் வரை 17 வெள்ள நிவாரண மையங் களில் 1,195 பேர் தங்கியிருந் ததாக பகாங் மாநில பேரிடர் மேலாண்மை செயற்குழு செயலகம் தெரிவித்தது. பெக்கானில் மட்டும் 975 பேர் தற்காலிக வெள்ள நிவாரண மையங்களில் தங்கியிருக்கின்றனர்.

### பகாங், ஜோகூரில்

# நாளை வரை கனத்த மழை பெய்யும்



கோலாலம்பூர், ஜன. 13-

பகாங், ஜோகூர் மாநிலங்களிலுள்ள பல பகுதிகளில் நாளை ஞாயிற்றுக்கிழமை வரை கனத்த மழை பெய்யும் என மலேசிய வானிலை ஆய்வுத்துறை எச்சரித்துள்ளது.

பகாங் மாநிலத்தின் ரொம்பின் மாவட்டத்திலும் ஜோகூர் மாநிலத்தின் சிகாமாட், பொந்தியான், கூலாய், ஜோகூர்பாரு ஆகிய மாவட்டங்களிலும் கனத்த மழை பெய்யும் என நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் அது கூறியது. அதேவேளையில், பகாங் மாநிலத்தின் பெக்கான் மாவட்டத்திலும் ஜோகூர் மாநிலத்தின் தங்காக், மூவார், பத்து பஹாட், பொந்தியான், கூலாய், ஜோகூர்பாரு ஆகிய மாவட்டங்களில் அடை மழை பெய்யும் எனவும் அது கூறியது.

அதேபோல், சரவாக் மாநிலத்தின் கூச்சிங், செரியான், சமாரஹான், ஸ்ரீ அமான், பெத்தோங், சரிக்கேய், முக்கா ஆகிய மாவட்டங்களில் அடை மழையும் எனவும் அந்த அறிக்கை கூறியது.

### 15ஆவது நிறைவு ஆண்டையொட்டி

# ஜிஎம் கிள்ளானின் பிரத்தியேகப் பிரச்சாரம்

கிள்ளான், ஜன. 13-

மலேசியாவில் மிகப்பெரிய மொத்த விற்பனை மையமான ஜிஎம் கிள்ளான் ‘Spend, Download and Redeem’ என்ற பிரத்தியேகப் பிரச்சாரத்தோடு இவ்வாண்டைத் தொடங்கியுள்ளது.

தமது 15ஆவது நிறைவு ஆண்டையொட்டி ஜிஎம் கிள்ளான் இந்தப் பிரச்சாரத்தை இம்மாதம் 15ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 18ஆம் தேதி வரையில் ஏற்பாடு செய்துள்ளது.

குறிப்பாக பொருட்களை வாங்குவதற்குத் தங்களின் முதன்மைத் தேர்வாக ஜிஎம் கிள்ளானை எப்போதும் தேர்வுசெய்யும் வாடிக்கையாளர்களின் ஆதரவுக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்தப் பிரச்சாரம் நடத்தப்படுகின்றது.

15 ஆண்டுகளாகச் செயல்பாட்டில் உள்ள ஜிஎம் கிள்ளான் பல்வேறு வெற்றிகளையும் அடைவுநிலைகளையும் பெற்று இந்த இடத்திற்கு வந்துள்ளது. இந்நிலையில் ஜிஎம் கிள்ளானின் 15ஆவது நிறைவாண்டு கொண்டாட்டத்தை மேலும் பிரபலப்படுத்த இவ்வாண்டு இறுதி வரையில் பல்வேறு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன என்று ஜிஎம் கிள்ளான் மொத்த விற்பனை மைய தொடர்புப் பிரிவு முதன்மை நிர்வாகி நோர் சுஹைடா ஒஸ்மான் தெரிவித்தார்.

அதிலும் புதிய அம்சங்களோடு ஜிஎம் கிள்ளான் வர்த்தக சமூக செயலியும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் பல்வேறு சிறப்பு சன்மானங்களைப் பெறுவதோடு பொருட்களை வாங்கும் அனுபவங்களை உயர்த்துவதற்கு இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.




இதன்மூலம் ஜிஎம் கிள்ளானின் 15ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடத் திட்டமிடப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்குமாறு பொதுமக்களை நாங்கள் அழைக்கின்றோம் என்றார் அவர்.

இதனிடையே இந்த ‘Spend, Download and Redeem’ பிரச்சாரத்தில் வாடிக்கையாளர்கள் ஜிஎம் கிள்ளானில் உள்ள எந்தவொரு கடையிலும் குறைந்தபட்சம் செலவுசெய்து அதனை ஜிஎம் கிள்ளான் வர்த்தக சமூகச் செயலியில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.




இதன்மூலம் தேர்வுபெறுபவர்களுக்கு ஜிஎம் கிள்ளானின் நிறைவாண்டையொட்டி வடிவமைக்கப்பட்ட தலையணைகள் பரிசாக வழங்கப்படும்.

ஜனவரி 20ஆம் தேதி தொடங்கி இந்தப் பிரச்சாரம் நிறைவுபெறும் நாள் வரையில் ஒவ்வொரு வார இறுதியிலும் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

பொருளாதார மேம்பாட்டை உயர்த்துவதில் தொழில் துறைகளின் தேவைகளையும் திறமைகளையும் ஜிஎம் கிள்ளான் மொத்த விற்பனை மையத் தரப்பு உணர்கிறது.

இதன்மூலம் வாடிக்கையாளர்களுக்கும் வர்த்தக சமூகத்தினருக்கும் சிறந்த விற்பனை அனுபவங்களை வழங்குவதில் ஆக்கப்பூர்வமான மையமாகத் தொடர்ந்து திகழ ஜிஎம் கிள்ளான் முனைகிறது.